## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 17/2023**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சையத்தாவுத் அலி | தொழில் | : பிளாஸ்டிக் கூடை வியாபாரம் |
| தந்தை பெயர் | : சையத் இஸ்மாயில் | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 44 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சி நரசிங்கராயன் பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தெருவில் பிளாஸ்டிக் குடம் விற்பனை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி தெரியும். எங்கள் தெருவுக்கு பக்கத்து தெருவில் உள்ளார்.

2. கடந்த 09.11.2022ந் தேதி மாலை 04.00 மணியளவில் ஆஜர் எதிரி குடித்துவிட்டு வந்து எங்களது தெருவில் பள்ளிவாசல் போகும்வழியில் என்னை பார்த்து தெவிடியா பையா, உன்னை நான் சாகடித்து விடுவேன், கல்லால் தூக்கி என்னை அடிக்க வீசினார் என் மீது படாமல் கல் சென்றது. உடனே நான் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். உடனே செஞ்சி போலிசாரும் வந்து விசாரித்தார்கள். அடுத்த நாள் செஞ்சி காவல் நிலையம் சென்று வழக்கு பற்றி கேட்டபோது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**( 1. 10.11.2022 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

09.11.2022 ந் தேதி என்னை நேரடியாக திட்டியதாக அ.சா.ஆ.1ல் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் ஆஜர் எதிரி அருள்ராஜ்க்கும் முன்விரோதம் எதுவும் இல்லை என்றால் இல்லை. ஆஜர் எதிரி கிருஷ்டின் என்றாலும் நான் முஸ்லீம் என்றாலும் சரிதான். பள்ளிவாசலில் எனக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை. பள்ளிவாசல் அருகில் எதிரியின் வீடு உள்ளதா என்றால் இல்லை. பள்ளிவாசல் அமைந்துள்ள தெருவில் தான் எதிரி வீடு உள்ளது. ஆஜர் எதிரிக்கு மனைவி, குழந்தைகள் என்று யாரும் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி சிலநேரம் நல்ல மனநிலையோடு வந்து வணக்கம் பாய் என்று என்னிடம் பேசுவான் என்றால் சரிதான். ஆஜர் எதிரி மனநிலை பாதித்தவாறு பேசும்போது நான் பொருட்படுத்துவது இல்லை என்றால் சரிதான். எதிரி படிக்காத உலகறிவு இல்லாத நபர் என்றால் சரிதான். அன்றாட கூலி வேலைக்கு செல்பவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரி செய்த தவறை உணர்ந்து என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டால் ஏற்றுக்கொள்கிறேனா என்றால் ஏற்றுக்கொள்வேன். ஆஜர் எதிரி இன்றைய தினம் என்னை சந்தித்து மன்னிப்பு கேட்டார் என்றால் 1/4 மணி நேரத்திற்கு முன்பாக மன்னிப்பு கேட்டார். மன்னிக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக உள்ளேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஃகுற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.